செய்தி வெளியீடு எண்.212/2009 நாள்: 29.4.2009

**வேலூர், அரக்கோணம், மக்களவை தேர்தல் 2009 வேட்பாளர்களின் தேர்தல் நடத்தை விதிமுறைகள், தேர்தல் செலவினம் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்களவை தேர்தலை முன்னிட்டு மக்களவை தேோதலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி உறுப்பினர்களுடன் தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்தும் தேர்தல் செலவினத்தை அவ்வப்பொழுது வழங்குவது தொடர்பான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் செல்வி.ஆ.சுகந்தி, இ.ஆ.ப., அவர்களும் தேர்தல் பார்வையாளர்கள் திரு.ஒய்னம் நபகிஷோர் சிங், இ.ஆ.ப., திரு.வீர்பன்சிங் தன்வார், இ.வ.ப. திரு.அலோக் குமார், ஐஆர்எஸ்., திரு.விக்ரம் தேவ் தத், இ.ஆ.ப., திரு.அவினாஷ் குமார், ஐஆர்எஸ்., திரு.எஸ்.எஸ். ஃபாத்தி, இ.வ.ப., திரு.சுபாஷ் சந்திர குந்தியா, இ.ஆ.ப., மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.அறிவுச் செல்வம், இ.கா.ப., தேர்தல் அலுவலர்கள் உதவி தேர்தல் அலுவலர்கள் அனைத்து வேட்பாளர்கள், வேட்பாளரை சார்ந்த அரசியல் கட்சியினர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கூறுகையில்: நடைபெறவுள்ள மக்களவை தேர்தல் 2009 சுமுகமாகவும், அமைதியாகவும், நடைபெற அனைத்து அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், சுயேட்சை வேட்பாளர்கள் தேர்தல் நடத்தை விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். வேட்பாளர்களின் செலவுக் கணக்குகளை சம்மந்தப்பட்ட தேர்தல் கணக்கு அலுவலரிடம் 3 நாட்களுக்கு ஒரு முறை கொடுக்க வேண்டும். நீங்கள் கொடுக்கப்படாவிட்டால் செலவுகள் உங்கள் கணக்கில் சேர்க்கப்படும். தேர்தல் ஆணையத்திடமிருந்து தேர்தல் நடைமுறைகள் குறித்து விவரங்கள் தொடர்ந்து வந்துக் கொண்டே உள்ளது.

சமுதாயத்தில் நடைபெறும் சடங்கு விழாக்கள், திறப்பு விழாக்கள், நடக்கும் இடங்களில் வேட்பாளர் அன்பளிப்பு, உணவு பொட்டலங்கள் வழங்க கூடாது. கர்சிப், தொப்பி மட்டும் தான் வழங்கப்பட வேண்டும். தொண்டு நிறுவனங்களிடமிருந்து வேட்பாளர்கள் பாராட்டு பத்திரங்கள், கௌரவ விருதுகள் பெறக்கூடாது. வேட்பாளர் வாகனங்களில் விளம்பரம் செய்ய பெறப்படும் அனுமதி ஆணையை வாகனத்தின் முன்பக்க கண்ணாடியில் ஒட்டி வைக்க வேண்டும். அதன் நகல்களை தங்கள் வசம் வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு பெறப்படும் அனுமதி எவருக்காக வழங்கப்பட்டதோ அவர் மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேறு யாரும் பயன்படுத்த கூடாது. அனுமதி இன்றி தேர்தல் விளம்பரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனம் பறிமுதல் செய்யப்படும்.

..2..

வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கலிலிருந்து வாக்கு எண்ணிக்கை வரையிலான செலவுகள் வேட்பாளரின் கணக்கில் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு வேட்பாளரும் ரூ.25 லட்சம் வரையில் செலவு செய்யலாம். தேர்தல் முடிந்த 30 நாட்களில் கணக்கு தாக்கல் செய்ய வேண்டும் இல்லையெனில் மூன்று ஆண்டுகளுக்கு தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள். வேலூர் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் கணக்குகளை கணக்கு அலுவலர் திருமதி.பிரேமாவதி, உதவி கணக்கு அலுவலர்கள் திருமதி.எம்.மலர்கொடி, திரு.எஸ்.கிருஷ்ணன் ஆகியோரிடமும் அரக்கோணம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் கணக்குகளை கணக்கு அலுவலர் திரு.மைக்கேல் சிங்கராயன், உதவி கணக்கு அலுவலர்கள் திரு.எம்.பன்னீர்செல்வம், திரு.சுந்தரபாண்டியன் ஆகியோரிடமும் வழங்கப்பட வேண்டும். தேர்தல் கணக்குகளின் விவரங்களை தேர்தல் அலுவலரும், தேர்தல் பார்வையாளர்களும் பார்வையிடுவார்கள்.

தேர்தல் நேரத்தில் பயன்படுத்தப்படும் பொருட்களான சேர், வெல்வெட் சேர், டியுப்லைட் பிற இனங்களுக்கான செலவு விவரங்கள் தேர்தல் ஆணையத்தால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் கொடுக்கும் விலை விவரம் ஏற்றுக் கொள்ளப்படாது. அரசு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை பட்டியலின் படியே எடுத்துக் கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சியர் கூறினார். பின்னர் வேட்பாளர்களின் சந்தேகங்களுக்கான கேள்விகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டதுடன், அனைத்து வேட்பாளர்களுக்கும், தேர்தல் நடைமுறைகள் குறித்த கையேடும், தேர்தல் செலவினங்களை தாக்கல செய்வதற்கான மாதிரி படிவங்களும் வழங்கப்பட்டது.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.